யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 சித்திரை 04 வியாழக்கிழமை (17-04-1997) - UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 140

# கொழும்பிலும் மற்றும் பகுதிகளிலும் படையினர் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

## புலிகள் தாக்கலாம் என புலனாய்வுத் தகவல்

கொழும்பு, ஏப்ரல் 17

நாளை மறுதினம் 19 ஆம் திகதியையொட்டி பெருந்தாக்குதல் ஒன்றை நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளார்கள் என்று கிடைத்த புலனாய்வுத் தகவலையடுத்து கொழும்பிலும் மற்றும் புறநகர்ப் பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

அன்னை பூபதியின் 9 ஆவது ஆண்டு நினைவு தினம்— சந்திரிகா அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மூன்று மாத கால யுத்த நிறுத்தம் முறிவடைந்து 3ஆம் ஈழப்போர் ஆரம்பித்து இரண்டாவது ஆண்டு நிறைவு தினம்— யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஸ்ரீலங்கா படையினர் வடமராட்சி, தென்மராட்சி ஆகியவற்றைக் கைப்பற்றுவதற்கான படை நடவடிக்கையை ஆரம்பித்த முதலாவது ஆண்டு பூர்த்தி தினம் ஆகியவை 19ஆம் திகதி வருகின்றன.

இவற்றையொட்டி புலிகள் பெருந் தாக்குதலை நடத்தலாம் என தகவல் கிடைத்துள்ளதாக படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எந்த ஒரு தாக்குதலையும் முறியடிக்கும் வகையில் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். பாது

(8 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப அடுத்த முறை கவிழ்க்க முந்தி உழைச்சிடலாம் போல......!

திருகோணமலையில்

## சங்கீதக் கச்சேரி நடந்த இடத்தில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, ஏப். 17

திருகோணமலை, அபயபுர விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு பொதுமக்கள் காயமடைந்தனர்.

இரவு சங்கீதக் கச்சேரி நடைபெற்ற சமயம் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக நேற்று இடம்பெற்ற அடையாள அணிவகுப்பொன்றில் நான்கு பொலீஸார் பொதுமக்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த பொதுமக்களில் இருவர் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உப்புவெளி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் றொஹான் பெர்னாண்டோ தகவல் தருகையில், பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட்டு சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (இ-4)

## கிடங்கில் போட குருக்கள் சடலத்தை இழுத்து வந்தார்

### குருக்களின் மனைவி கொலையில் ஐயர் சாட்சியம்

திருகோணமலை, ஏப். 17

''வீட்டுக்குப் பின்புறம் வெட்டப்பட்ட கிடங்கில் அம்மாவின் சடலத்தைப் போட்டு மூடுவதற்காக குருக்கள் சடலத்தை ''தொற, தொற'' என இழுத்து வந்தார். கிடங்கில் தலையை முதலில் போட்டு, பின்னர் காலால் உதைந்து சடலத்தை கிடங்கில் தள்ளினார்''

திருகோணமலை கோணேசர் ஆலய முன்னாள் பிரதம குருக்கள் வியாகேஸ்வர சர்மாவின் மனைவியான அம்பிகாவின் மரணவிசாரணையின் போது வெங்கடராமன் பாலமுரளி (24 வயது) எனும் உதவி ஐயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

வியாகேஸ்வர சர்மா அம்பிகாவின் மரண விசாரணை நேற்று திருகோணமலை

(7ஆம் பக்கம் பார்க்க)

## 2 டிரான்ஸ்போமர்கள் வவுனியாவில் தகர்ப்பு!

### தீப்பிடித்து 2 கடைகள் நாசம்

கொழும்பு, ஏப். 17

வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் இரண்டு மின்சார டிரான்ஸ்போமர்கள் இனந் தெரியாதோரினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் ஒன்றும் வவுனியாவிலிருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் மற்றொன்றுமாக இந்தக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

வவுனியா நகரில் டிரான்ஸ்போமர் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலின் போது தீப்பிடித்துக் கொண்டதில் அருகிலிருந்த இரண்டு கடைகள் எரிந்து நாசமாகின.

எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## கப்பல்சேவை

யாழ்ப்பாணம், ஏப். 17

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு இன்று 500 பயணிகளுடன் கப்பல் சேவை இடம்பெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

யாழ். சிவில் அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 541 முதல் 560 வரை உள்ளவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## கால்நடையாக ரோந்து வந்த படையினர் மீது புலிகள் தாக்குதல்

### வாழைச்சேனையில் சம்பவம்

கொழும்பு, ஏப். 17

வாழைச்சேனை நகரில் கால் நடையாக ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்குதல் நடத்தியதில் இரு இராணுவத்தினர் காயமடைந்தனர். இவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரியவருகிறது

கடந்த ஞாயிறன்று புத்தாண்டு பிறப்பதற்கு சிலமணி நேரம் முன்னதாக பிற்பகல் 5. 30 மணியளவில் இத்தாக்குதல் இடம்பெற்றது.

மீன்பிடித் துறைமுக சட்டட முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் தபால் நிலையத்தை அண்மித்த போது புலிகள் மறைந்திருந்து இத்தாக்குதலை நடத்தினர்.

(8 ஆம்பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. பரீட்சை முடிவுகள்

கொழும்பு, ஏப். 17

கடந்த டிசம்பரில் நடந்த ஜி. சீ. ஈ. (சாதாரணதர) பரீட்சை முடிவுகள் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் வெளியாகும் என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ-3)

## நேற்றும் 98 பேர் குருநகர் வந்தனர்

நவாலி, ஏப். 17

நாச்சிக்குடாவிலிருந்து 28 குடும்பங்களைச் சேர்ந்த 98 பேர் வள்ளங்கள் மூலம் நேற்று குருநகர் வந்து சேர்ந்தனர். (இ-100)

# புதிய தலைவரைத் தெரிவு செய்ய ஐக்கிய முன்னணி இன்று கூடுகிறது

### பாரதீய ஜனதா கண்டனம்

புதுடில்லி, ஏப். 17

தேவகௌடாவுக்குப் பதிலாக புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழு இன்று கூடுகிறது.

இன்று தெரிவு செய்யப்படும் தலைவரே இந்தியாவின் புதிய பிரதமராகப் பதவி ஏற்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேவகௌடாவுக்குப் பதிலாக ஐக்கிய முன்னணி புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்தால் அவரை ஆதரிக்கத் தயார் என்று காங்கிரஸ் ஏற்கனவே அறிவித்தது தெரிந்ததே.

காங்கிரஸ் ஆதரவுடன் மீண்டும் மத்தியில் ஐக்கிய முன்னணியின் ஆட்சி ஏற்பட இருப்பதை பாரதீய ஜனதா கண்டித்துள்ளது

தற்போது எழுந்துள்ள நெருக்கடிக்கு பொதுத் தேர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்தோர் உலர் உணவு
# உரிய காலத்தில் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 17
இடம் பெயர்ந்தவர்களுக்கான மாதாந்த உலர் உணவு நிவாரணத்தை அந்தந்த மாதத்திலேயே வழங்கயாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

குடாநாட்டில் உள்ள இடம் பெயர்ந்த மக்கள் தமக்கான மாதாந்த நிவாரணப் பொருள்களை 2,3 மாதங்கள் கழித்தே பெற்றுக் கொள்ள முடிகிறது.

தற்சமயம் போதியளவு உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளன.

இதன் காரணமாக அந்தந்த மாதத்திலேயே நிவாரணப் பொருள்களை வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரண விநியோகத்தில் சில ப. நோ. கூ. சங்கங்கள் கூடுதல் அக்கறை காட்டினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உரிய மாதத்தின் தொடக்கத்திலேயே நிவாரணத்தை வழங்கக் கூடியதாக இருக்கும் எனச் சுட்டிக் காட்டப்பட்டது.

(ஐ-3)

## விமானப்படை வீரர் குளத்தில் மூழ்கி மரணம்

திருகோணமலை மாவட்டம் பன்மதவாச்சி விமானப் படை முகாமைச் சேர்ந்த தமிழரான விமானப்படை வீரர் ஒருவர் குளத்தில் மூழ்கி மரணமானார்.

குளத்தில் குளித்துக்கொண்டிருந்த அர்ஜினா ரட்ணகாந்தன் முத்தையா என்ற இந்த விமானப்படை வீரர் சேற்றில் சிக்கி மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவரது மரணம் குறித்து விசாரணை நடத்திய மொறவேவ மரணவிசாரணை அதிகாரி நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார். (இ-3)

## போக்குவரத்துச் சபையின்
## பருத்தித்துறை-கொடிகாமம் போக்குவரத்துச் சேவை விரைவில்

பருத்தித்துறையில் இருந்து மீண்டும் கொடிகாமம் வரையிலான வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும், சேவையை மேற்கொள்வதற்கான அனுமதி இராணுவ தரப்பில் இருந்து கிடைத்ததும் இது நடைமுறைப்படுத்தப்படும் எனவும், வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த அதிகாரி ஒருவரினால் தெரிவிக்கப்பட்டது.

தற்போது பருத்தித்துறை டிப்போவுக்கு புதிதாக வழங்கப்பட்டுள்ள பஸ் இச்சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-15-173)

## வவுனியா - மன்னார் பாதையில் தினமும் நான்கு பஸ்கள் சேவையில்

கொழும்பு, ஏப். 17
வவுனியா — மன்னார் பாதையில் தினமும் 4 பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன.

அதேசமயம் மன்னார் முருங்கன் பகுதியிலிருந்து நெல், மீன் மற்றும் விளை பொருள்கள் வவுனியாவுக்கு லொறிகளில் கொண்டுவரப் படுகின்றன.

வவுனியாவில் இருந்து கோதுமை மா, குளிர்பானங்கள் மற்றும் சிமெந்து, கட்டடப் பொருள்கள் மன்னாருக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. (இ-4)


ஸ்ரீ முருகன் சன சமூக நிலையம்
அல்லையம்பதி துன்னாலை
அதிர்ஷ்ட லாபசீட்டிழுப்பு
முடிவுகள்

1 ஆம் பரிசு இல. 838
2 ஆம் பரிசு இல. 184
3 ஆம் பரிசு இல. 245

10 ஆறுதல் பரிசு இலக்கங்கள்

1) 410 2) 1779 3) 1745 4) 1770 5) 1084
6) 1706 7) 1107 8) 1264 9) 655 10) 316

மேற்படி இலக்க சீட்டுக்களினை உடையவர்கள் நிலைய செயலாளரிடம் அல்லது சீட்டினை பெற்றவர்களுடன் தொடர்பு கொண்டு பரிசைப் பெற்றுக் கொள்ளவும்.

க. குகனேந்திரன்
செயலாளர்

(46397)



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
முறைசாராக் கல்விப் பிரிவு
பயிற்சி நெறிகள்-1997

பாடசாலையை விட்டு வெளியேறியோருக்கான பின்வரும் கற்கை நெறியை இவ்வருடம் எமது முறைசாராக்கல்விப் பிரிவு நடத்தத் திட்டமிட்டுள்ளது

| பயிற்சி நெறி | ஆகக்குறைந்த கல்வித் தகைமை |
|---|---|
| 1. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) | க. பொ.த. (சா.த) சித்தி தமிழ் திறமைச் சித்தியுடன் |
| 2. வர்த்தக நிறுவக கணக்குப் பதிவுகள் | க. பொ.த. (சா.த) சித்தி வர்த்தகம் சாதாரண சித்தியுடன் |

விண்ணப்ப முடிவு திகதி: 25-04-1997

விண்ணப்பங்களை கல்லூரிப் பணிமனையில் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க. இராசதுரை
அதிபர்

(சி/513)


## திருமணத் தம்பதியர் வந்த படகை நோக்கிச் சூடு
### நெடுந்தீவுக் கடலில் சம்பவம்

நெடுந்தீவு, ஏப். 17
அனலைதீவில் இருந்து நெடுந்தீவுக்கு வந்து கொண்டிருந்த புதுமணத் தம்பதியரின் படகு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானது.

கடந்த புதன்கிழமை நெடுந்தீவுக் கடலில் மேற்படி சம்பவம் இடம்பெற்றது.

படகில் இருந்தவர்கள் கைகளை உயர்த்தியபடி எழுந்து நின்றதாகவும் —

அதன் பின்னரே சுடுவது நிறுத்தப்பட்டதாகவும் — கூறப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக படகில் சன்னங்கள் பாய்ந்து சிறு உடைவுகள் ஏற்பட்டபோதும் பயணிகள் எவரும் காயங்களுக்கு உள்ளாகவில்லை.

(இ-111)

## தற்காலிக ஓய்வூதியம் வழங்க ஏற்பாடு

கடந்த டிசம்பர் மாதம் 23 ஆம் திகதியிலிருந்து பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 44/90 இரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அத்தினத்துக்கு முன் இளைப்பாறியவர்களுக்கு (ஓய்வூதியம் பெறத் தகைமையுடையோருக்கு) ஒரு தற்காலிக ஏற்பாடாக அவர்கள் பெறவிருக்கும் ஓய்வூதியத்தில் 70 சதவீதத்தை வழங்குமாறு ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இச் சுற்றறிக்கை ஏற்பாட்டின் படி ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் இத்தற்காலிக ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தாம் கடமையாற்றிய பாடசாலைக்குரிய கல்வித் திணைக்களத் தலைவருக்கு விண்ணப்பிக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (இ-4)

## பளை அரச வைத்தியசாலை ரூபா 5 லட்சம் செலவில் புனரமைப்பு

பளை அரச வைத்தியசாலை 5 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி பளைப் பிரதேச செயலகத்தினால் பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி வேலைகள் திட்டத்தின் கீழ் ஒதுக்கப் பட்டது.

3 இலட்சம் ரூபா செலவில் புதிய வார்ட் ஒன்றின் பகுதி வேலைகளும் —

ஒரு லட்சம் ரூபா செலவில் வார்ட்டுகளின் கூரைகள் திருத்தவேலைகளும் —

ஒன்றேகால்இலட்சம் ரூபா செலவில் குழாய்க் கிணறு ஒன்றும் நீர்விநியோக குழாய்கள் இணைப்பு வேலைகளும் நடைபெற்றுள்ளன என்று வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ச. அம்பிகைபாலன் தெரிவித்தார்.

(இ-117)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் தாதியருக்குப் பற்றாக்குறை

தென்மராட்சி, ஏப். 17
சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் தாதி உத்தியோகத்தர் பற்றாக்குறையாக உள்ளதால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தாதி உத்தியோகத்தர்கள் சிலர் இடம் பெயர்ந்துள்ளதாலும் மேற் படிப்புக்காகச் சென்றதாலும் தாதியருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த வருடம் இந்த ஆஸ்பத்திரியில் மார்பு நோய் சிகிச்சைப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ள போதிலும் இப்பிரிவுகளுக்குரிய தாதி உத்தியோகத்தர்கள் இன்னும் வராததால் ஆஸ்பத்திரி உத்தியோகத்தர்களே மார்பு நோய் வார்ட்டுகளில் கடமையாற்றுகின்றனர்.

இவ்வுத்தியோகத்தர்களின் பற்றாக்குறையினால் வார்ட்டுகளிலும், வெளிநோயாளர் பிரிவிலும் சிகிச்சை பெறும் நோயாளர்கள் சிரமங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## நுண்கரு வேலைத் திட்ட திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப். 17
வலி. கிழக்கு பிரதேச சபையால் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் திருத்தி அமைக்கப்பட்ட நுண்கரு வேலைத்திட்டங்களின் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

இவ்வைபவத்துக்கு யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் பிரதம விருந்தினராகவும், அகதிகளுக்கான ஐ. நா. தூதரக வெளிக்கள உத்தியோகத்தர் பபியோவரோலி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-3)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு 2 மாடி கட்டடம்

தென்மராட்சி, ஏப். 17
சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கென இரண்டு மாடிக் கட்டடம் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## மாதாந்த உதவிப் பணம்

தென்மராட்சி, ஏப். 17
தென்மராட்சி பிரதேசத்தில் மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் மற்றும் தொழுநோய், காசநோய், புற்றுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவுகள் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினரால் நேற்று அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அத்துடன் இப்பிரதேசத்தில் தங்கியுள்ள தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் ஏப்ரல் மாதக் கொடுப்பனவுகளும் அந்தந்த அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (இ-117)

## கைதானவர் இன்னும் விடுதலையில்லை

கொழும்பு, ஏப். 17
கடந்த 4 ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தையில் வியாபார நிலையம் ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்ட தமிழர் ஒருவர் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

அவர் சீ. ஐ. டி. பொலீஸாரால் 4 ஆம் மாடியில் வைத்து தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

கணபதிப்பிள்ளை ரவீந்திரன் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே கைது செய்யப்பட்டவராவார். (ஐ)

## மதுசாரம் செறிந்த பனஞ்சாராயம்

வடமராட்சி, ஏப். 17
பனஞ்சாராயத்தின் மதுசாரச் செறிவு (அல்ககோல்) அதிகரிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினால் ''விகர்'' என்ற பனஞ் சாராயம் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இச்சாராயத்தில் மதுசாரச் செறிவு முன்னரை விட தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

## கூரையிலிருந்து விழுந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 17
வீட்டுக் கூரையில் இருந்து கீழே விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

தொண்டமானாற்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த கனகன் தங்கராசா (வயது 51) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

கூரையில் இருந்து சீற்றுக்களைக் கழற்றிக் கொண்டிருந்த சமயம் கூரை மரமொன்று திடீரென முறிந்த போது அவர் கீழே விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்திய நிலையிலேயே நேற்று அதிகாலை அங்கு அவர் இறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நூலகம்

## மக்காவில் பெரும் தீ அனர்த்தம்

# ஹஜ் யாத்திரிகர் 250பேர் மரணம்!

## ஆயிரத்து 300 பேர் காயம்!!

மக்கா, ஏப்ரல் 17

சவுதி அரேபியாவின் மக்கா நகரில் புனித கடமையைநிறைவேற்றுவதற்காகசுமார்20லட்சம்ஹஜ்யாத்திரிகர்கள் திரண்டிருந்த பகுதியில் இடம்பெற்ற மிக மோசமான தீ விபத்தினால் 250 க்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் உடல் கருகிப் பலியாகினர்.சுமார் ஆயிரத்து 300 பேர் காயமடைந்தனர்,

யாத்திரிகர்கள் தங்கியிருந்த 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூடாரங்கள் தீயில் எரிந்து சாம்பராகின.

உலக இஸ்லாமியர்களின் முக்கிய புனித தலத்தில் இடம் பெற்றிருக்கும் இத் தீ அனர்த்தத்தில் உயிரிழந்து விட்டோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மக்காவில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மீனா என்னுமிடத்தில் அமைந்திருந்த யாத்திரிகர்களின் கூடாரங்களிலேயே நேற்று முன்திலம் முற்பகல் 11.45 மணியளவில் தீ பரவியது.

பலியானவர்களில் பெரும்பாலானோர் இந்திய யாத்திரிகர்களே என்று முதலில் வெளியான செய்திகள் தெரிவித்தன. ஏனையோர் பங்களாதேஷ், பாகிஸ்தான் நாட்டவர்கள்.

இஸ்லாமிய உலகை சோகத்தில் ஆழ்த்தியுள்ள இச் சம்பவம் குறித்து சவுதி அரேபிய மன்னர் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறார்.

ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனானும் இந்த அனர்த்தம் குறித்து கவலை தெரிவித்துள்ளார்.

புனித ஹஜ் யாத்திரை மீனா நகரில் இருந்து நேற்று ஆரம்பமாக இருந்த வேளை இந்த அனர்த்தம் இடம் பெற்றிருக்கிறது.

இத் தீ விபத்தில் 217 யாத்திரிகர்கள் உயிரிழந்ததாகவும், ஆயிரத்து 290 பேர் காயமடைந்ததாகவும் சவுதி அரேபியாவில் இருந்து உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது (ஐ)

உலக அரங்கில்

## மக்காவில் ஆண்டுதோறும் இத்தகைய அனர்த்தங்கள்

மக்கா, ஏப். 17

ஆண்டுதோறும் புனித கடமையை நிறைவேற்ற மக்காவில் இஸ்லாமிய யாத்திரிகர்கள் கூடுகின்ற வேளைகளில் பெரும் அனர்த்தங்களும் உயிரிழப்புகளும் ஏற்படுவது வழமையாகிவிட்டது.

கடந்த சில ஆண்டுகளாக இத்தகைய அனத்ர்தங்கள் அங்கு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

★ 1979 ஆம் ஆண்டு சவுதி அரேபியாவுக்கு எதிரான ஆயுத பாணிகளால் ஹஜ் யாத்திரிகர்கள் பலர் பணயக் கைதிகளாக்கப்பட்டனர். இரு வாரங்கள் நீடித்த இப் பணய நாடகம் முடிவுக்கு வந்த சமயம் 153 யாத்திரிகர்கள் பலியாகினர், 560 பேர் காயமடைந்தனர்.

★ 1987 ஆம் ஆண்டு ஈரான் நாட்டு யாத்திரிகர்களும், சவுதி அரேபிய பொலீஸாரும் மோதிக் கொண்டதில் 400 ஈரானிய யாத்திரிகர்கள் பலியாகினர்.

★ 1990 ஆம் ஆண்டு மதீனாவில் ஏற்பட்ட நெரிசலில் ஆயிரத்து 436 யாத்திரிகர்கள் பலியாகினர்.

★ 1994 ஆம் ஆண்டிலும் யாத்திரிகர்களிடயே ஏற்பட்ட நெரிசலில் 270 பேர் பலியாகினர்.

★ 1995 ஆம் ஆண்டில் மதீனாவில் இடம் பெற்ற தீ விபத்தில் 3 யாத்திரிகர்சுள் பலியாகினர். 99 பேர் காயமடைந்தனர். (ஐ)

## சிலிண்டர் வெடித்தே தீ பரவியது!

பாகிஸ்தான் நாட்டு யாத்திரிகர்கள தங்கியிருந்த விடுதி ஒன்றில் சமையல் வாயு சிலிண்டர் வெடித்ததினாலேயே மீனாவில் தீ பரவியதாக அறிவிக்சப்படுகிறது.

மீனாவில் நிலவிய கடும் வெயில் மற்றும் காற்று காரணமாக கூடாரங்களில் தீ காட்டுத் தீ போல் பரவியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெருக்கமாக அமைந்திருந்த 70 ஆயிரம் கூடாரங்களும் தீப்பற்றி எரிந்த போது கரும்புகை மண்டலம் வானில் திரண்டது.

இதேவேளை—

மக்காவில் நடந்த தீ விபத்தில் இலங்கையர்கள் எவரும் பலியாகவில்லை என்று தொடர்பு சாதன பிரதி அமைச்சர் அலவி மௌலானா அங்கிருந்து அறிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களில் மலேசியா, இந்தோனேசியா, பலஸ்தீனம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தோரும் அடங்குவர்.

இச்சம்பவத்தில் நூற்றுக்கு மேற்பட்ட இந்திய யாத்திரிகர்கள் மரணமடைந்திருப்பது குறித்து இந்தியப் பிரதமர் எச்.டி. தேவ கௌடா அதிர்ச்சி தெரிவித்துள்ளார். (ஐ)

## முன்னாள் ஸயர் பிரதமர் தப்பி ஓட்டம்

அண்மையில் பதவி நீக்கப்பட்ட ஸயரின் பிரதமர் கொங்கோ டொங்குவா ஐரோப்பிய நாடு ஒன்றுக்குத் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலகோடி ரூபா அரச நிதியை கையாடியபின் தப்பிச் சென்றுள்ள அவரைக் கைது செய்ய சர்வதேச பிடியாணை ஒன்றை ஸயர் அரசு பிறப்பித்துள்ளது.

ஸயர் அதிபர் முபுட்டு நாட்டில் இல்லாத சமயம் இவர் பெரும் நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

ஸயரின் அரைவாசிப் பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ள கிளர்ச்சிப்படைகள் தலைநகர் கின்ஸாசாவை நோக்கி முன்னேறத் தொடங்கியதை அடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டிருக்கிறது. (ஐ-10)

## 30 அல்ஜீரியர்கள் கிளர்ச்சியாளரால் படுகொலை

அல்ஜீரியாவின் தலைநகரான அல்ஜியர்ஸுக்கு அண்மையிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த 30 பொதுமக்கள் கிளர்ச்சியாளர்களால் நேற்று முன் தினம் கொல்லப்பட்டனர்.

இவர்களுடன் சேர்த்து கடந்த 10 நாள்களில் 170 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் ஆதரவுடன் செயற்படும் அல்ஜீரிய அரசுக்கும் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கும் இடையில் கடந்த 5 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் உள் நாட்டுப் போரில் சுமார் 60 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலை அடுத்து விட்டுகிராமமக்கள் வதிவிடங்களைவிட்ட வெளியேறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

''நாங்கள்எங்கு செல்கிறோம் என்பதுஎங்களுக்கேதெரியாது. ஆனால்இந்த நரகத்திலிருந்து வெளியேறுகிறோம்'' என இடம்பெயர்ந்து செல்லும்ஒரு வயோதிபர் செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

## இங்கிருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்காக

# பயண அனுமதியை எதிர்பார்த்து சுமார் 10ஆயிரம்பேர் காத்திருப்பு

யாழ். மாவட்டத்தில் இருந்து பல்வேறு தேவைகளுக்காக வெளியிடங்களுக்குச் செல்லவென கப்பல், மற்றும் விமானப் பயணத்துக்குப் பதிவு செய்து அதற்கான பட்டியல் இலக்கத்தைப் பெற்ற சுமார் 10 ஆயிரம் பேர் பயண அனுமதியை எதிர்பார்த்து தற்போது காத்திருக்கின்றனர்.

யாழ். செயலக வட்டாரங்கள் இத் தகவலை வெளியிட்டன.

இவர்கள் பயண அனுமதியைப் பெறுவது நீண்ட கால தாமதமாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் பலர் தாங்கள் ''மாதக் கணக்காகக் காத்திருக்கிறோம்; ஆனால் பயண நாள் கிட்டவில்லை'' என்று முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

தற்போது நடைபெறும் கப்பல் சேவைகளில் பயண அனுமதி கிடைத்துள்ளவர்களில் குறைந்த எண்ணிக்கையானோரே பயணம் செய்வதாகவும்—

அதேவேளை பயண அனுமதி கிடைக்காத பலர் பயணம் செய்ய முடியாது வெளியே காத்திருக்கும் நிலை நீடிப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

சுமார் 8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் பேர் பயண அனுமதிக்காகக் காத்துள்ளனர் என செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது. (ஐ-3)

## கப்பலில் குத்தரிசி எருத்துவர ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 17

குடாநாட்டில் குத்தரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் குத்தரிசியை எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை 600 மெற்றிக் தொன் குத்தரிசியே இங்கு எடுத்து வரப்பட்டுள்ளதாகவும்—

இதன் காரணமாகவே குத்தரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் கொழும்பில் பொருள்களை ஏற்றிக் கொண்டிருக்கும் ''மேர்க் கண்டி'' என்னும் கப்பலில் தாராளமாக குத்தரிசி ஏற்றப்பட்டுள்ளதாகவும்—

அது வந்து சேர்ந்ததும் குத்தரிசிக்கான தட்டுப்பாடு நீங்கும் எனவும்—தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## கட்டடம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 17

இராணுவ நடவடிக்கையினால் சேதமடைந்த யாழ். மத்திய கல்லூரி ஆரம்ப பிரிவு கட்டடம் புனரமைக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. (ஐ-173)

## மருந்துக் கலவையாளர்களது பரீட்சையை இங்கு நடத்துக

### சுகாதாரப்பணிப்பாளரிடம் கோரிக்கை

திருநெல்வேலி, ஏப். 17

யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருந்துக் கலவையாளர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்து தருமாறு அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் (டிஸ்பென்சர்கள்) சங்க யாழ்.கிளை கொழும்பிலுள்ள தலைமைச் சங்கத்தின் ஊடாக சுகாதார சேவைப்பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த காலங்களில் இப் பரீட்சை கொழும்பிலும் கண்டி, பதுளை, குருநாகல், அனுராதபுரம் ஆகிய மாகாண வைத்தியசாலைகளிலும் நடத்தப்பட்டது. எனினும் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவில்லை. இப் பரீட்சை பற்றிய சுற்றறிக்கைகள் சீரற்ற தபால் சேவையினால் யாழ். மாவட்டத்திற்குத் தாமதமாகவே வந்து சேர்வதால் உரிய காலத்தில் விண்ணப்பிக்க முடியாது போய் விடுகின்றது. அத்துடன் போக்குவரத்து கஷ்டங்கள், தங்குமிடவசதி, பாதுகாப்பு கெடுபிடிகள் இவற்றினால் கொழும்புக்குச் சென்று இப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை இருந்து வருகின்றது.

இப்பரீட்சையில் சித்தியடையாத காரணத்தினால் மருந்துக் கலவையாளர்களின் வருடாந்த சம்பள உயர்வு, பதவியில் உறுதிப்படுத்தல், பதவி நிரந்தரம் என்பன கிடைக்காதிருக்கிறது.

ஆகவே இப் பரீட்சையை யாழ். அரசினர் போதனா வைத்திய சாலையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு வேண்டிக் கொள்கின்றோம் என்று மேற்படி யாழ். கிளைச்சங்கத்தின் செயலாளர் திரு.இ.தவராஜலிங்கம் கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ-135)

## சிறிமாவுக்கு வயது 82

கொழும்பு,ஏப்.17

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா இன்று தமது 81 ஆவது வயதைப் பூர்த்தி செய்கின்றார். (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவர் நீர்த் தடுப்பு அணைகளை புனரமைப்பதற்குத் திட்டம் தயார்

## நிதியை எதிர்பார்த்துத் தாமதம்

திருநெல்வேலி, ஏப். 17

அரியாலை, அராலி, தொண்டமனாறு ஆகிய கடல் நீரேரிப் பகுதிகளிலுள்ள உவர் நீர்த்தடுப்பு அணைகளை மீண்டும் புனரமைப்புச் செய்வதற்கு எட்டரைக் கோடி ரூபா செலவில் திட்டமொன்றை நீர்ப்பாசனத்திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகம் தயாரித்துள்ளது,

இத்திட்டம் அண்மையில் வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

கடந்த யுத்தகால அனர்த்தங்களின் போது சரியான முறையில் பராமரிக்கப்படாததினால் சேதமடைந்த நிலையிலுள்ள அரியாலை — செம்மணி உப்பாறு கடல் நீரேரி, அராலி – வழுக்கையாறு வடி நீர்வாய்க்கால், தொண்டமனாறு கடலேரி அணை என்பனவும் தீவகப் பகுதிகளிலுள்ள சிறிய அணைகளும் விரைவில் புனரமைக்கப்பட வேண்டியது அவசியம் என்று கருதப்படுவதால் அதற்கான செயற்திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் —

அதற்கான நிதி உதவி கிடைத்தவுடன் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் யாழ். நீர்ப்பாசனத்திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த அணைகள் விரைவில் புனரமைப்புச் செய்யப்படாது விட்டால் குடாநாட்டில் உள்ள நல்ல தண்ணீர்க் கிணறுகள் விரைவில் உவர் நீராக மாறும் சாத்தியக்கூறு உள்ளதாகவும், விவசாய பயிர்ச் செய்கையும் இப பகுதுகளில பாதிககப் படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

பஸ் டிப்போக்களில்

# பொறியியல் பயிற்சி பெற பத்துப் பேர் தெரிவாகினர்

வடமராட்சி, ஏப். 17

வடபிராந்திய போக்குவரத்துச்சபை டிப்போக்களில் பொறியியல் (மெக்கானிக்) பயிற்சி பெறுவதற்காக பத்துப்பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய தொழிற் பயிற்சிச் சபை இப்பயிற்சிக்கென 30 பேரை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்திருந்தது. இதில் 10 பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை இ. போ. ச டிப்போக்களில் தேசிய பயிற்சிச் சபையினால் தெரிவு செய்யப்பட்ட இப் பயிலுனர்களுக்கு பொறியியல் பயிற்சி அளிக்கப்படும். (ஐ-173)

# பாடசாலைகள் புனரமைப்புக்கு ஐந்து ஆண்டுத் திட்டம்

## விவரங்கள் சேகரிப்பு

ஐந்து ஆண்டுத்திட்டத்தின் அடிப்படையில் கோட்டப் பாடசாலைகள் பல புனரமைப்புச் செய்யப்பட உள்ளன.

புனரமைப்பும் திட்டமிடலும் சம்பந்தமான கூட்டம் ஒன்று எதிர் வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை திருகோணமலையிலுள்ள வடக்கு – கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ள அறிக்கையினை தயாரிப்பதற்கு வேண்டிய தரவுகளைப் பாடசாலை அதிபர்களிடமிருந்து பெற்று அனுப்பிவைக்குமாறு கோட்டக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களை யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள பாடசாலைகள் வேலைகள் பொறியிபலாளர் திரு. ஜி சிவபாலன் கேட்டுள்ளார்.

அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய பத்து பாடசாலைகளை முன்னுரிமை அடிப்படையில் பெயரிட்டு அனுப்பிவைக்குமாறும் —

கடந்த ஆண்டு இத்திருத்த வேலைகளுக்காக நிதி வழங்கப்பட்ட பாடசாலைகளுக்கு இவ்வாண்டு நிதி வழங்கப்படமாட்டாது எனவும் அவர் அறிவித்துள்ளார். (ஐ-152)

தெல்லிப்பளை மகாஜனா

# பழைய மாணவர் சங்க விவகார வழக்கு விசாரணை மே மாதம்

யாழ்ப்பாணம், ஏப். 17

தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் அமைக்கப்பட்டமை தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை அடுத்தமாதம் 29 ஆம் திகதி நடைபெறும் என்று மல்லாகம் மேலதிக மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த மனு மல்லாகம் மேலதிக மாவட்ட நீதிபதி திரு. எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன் எடுக்கப்பட்ட சமயம் எதிராளிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். இளங்கோவன் எதிராளிகளுக்காக சில ஆவணங்களைச் சமர்ப்பித்தார்.

இதைத் தொடர்ந்து வழக்கு விசாரணை அடுத்த மாதம் 29 ஆம் திகதி நடைபெறும் என்று மேலதிக மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டியதையும், இக் கூட்டத்தில் நடைபெற்ற சகல நடவடிக்கைகளையும் பிரதானமாக மேற்குறித்த பழைய மாணவர் சங்கத்திற்கெனத் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபையை இரத்துச் செய்து இவற்றை வெற்றும், வெறிதும் ஆக்கும்படியும் கோரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் வல்லிபுரம் இராசதுரை சார்பாக சட்டத்தரணி எம். சபாரத்தினம் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இம் மனுவில் கல்லூரி அதிபரும் மற்றும் நால்வரும் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ஐ-3)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை**

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து **1997-06-02** வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

**மிருக விஞ்ஞானம்/ விவசாய உயிரியல்/ விவசாய இரசாயனவியல்/ விவசாயப் பொருளியலில் விரிவுரையாளர்** (தகுதிகாண்)

**சம்பள அளவுத்திட்டம்:**
ரூபா 9, 350-10x255- 11, 900
மாதமொன்றுக்கு,

இத்துடன் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் 703 ஆம இலக்க 1997 பங்குனி 4 ஆம் தேதிய சுற்று நிருபத்திற்கு ஏற்ப மேற்குறித்த சம்பள அளவுத்திட்டம் 1998 சனவரி 1 ஆம் தேதியிலிருந்து முழுமையாகச் செலுத்தப்படும்.

இத்துடன் கல்விசார் படியாக (Academic allowances) மேற் குறித்த சம்பளத்தின் 30% கொடுப்பனவு செய்யப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் விசேட தகைமைகளை/ அனுபவத்தைக் கருத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் மக்கள் வங்கியின் யாழ். நவீன சந்தைக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/ நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 23x10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிடப்பட்ட ரூபா 2-50/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தின் தலைவர்களினூடாக தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1997-04-28

(சி-515)

---

# பாடசாலைகளை மூடாதீர்; தொடர்ந்து நடத்துவதே திறமை!

வாசகர் திருமுகம்

''ஒரு பாடசாலை திறக்கப்படும்போது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன'' — என்ற அருமையானதொரு அறிவுரை உண்டு.

இத்தகைய அறிவுரைகளை எல்லாம் தூக்கி ஒரு பக்கத்தில் ஒளித்து விட்டு சில பாடசாலைகளுக்கு விரைவில் மூடுவிழா நடத்த வெகு உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் சிலர் செயற்பட்டுவருவதாகத் தெரியவருகிறது

முழுத்தமிழினமே வேதனைப்பட்டுக் கண்ணீர் வடிக்க வேண்டிய விடயம் இது.

நவாலியில் வெகு காலமாக இயங்கி வரும் நவாலி அ.மி.த.க (ஸ்தான) பாடசாலையும் நவாலி தெற்கு அ.மி.த.க. பாடசாலையும் இவ்விதம் மூடப்படவிருக்கும் பாடசாலைகளுள் சில என அறியப்படுகிறது.

இப்போது பல பெரிய பாடசாலைகளில் கூட மாணவர் எண்ணிக்கை குறைந்துதானுள்ளது. இதற்காக இப் பாடசாலைகளை மூட யாரும் முயற்சி எடுக்கவில்லை.

அதுமட்டுமல்ல. சுமார் ஆறு வருடங்களாக அல்லது அதற்கு மேலாக இப்பகுதிச் சூழ்நிலை காரணமாக மூடிக்கிடந்த பல பாடசாலைகளைத் தீவுப்பகுதி பாடசாலைகள் உட்பட தற்போது திறந்து, திறம்படச்செயற்படத் தொடங்கியுள்ளன.

நிலைமை இவ்வாறிருக்க மேற்படி பாடசாலைகளை மூடுவது தமிழ்ச் சிறார்களுக்கு செய்யும் பலத்த துரோகமாகவே கணிக்கப்பட வேண்டும்.

மேற்படி பாடசாலைகளில் ஒன்றில் நான் அதிபராக இருந்த காலத்தில் (1994 இல்) சிலர் தமது சொந்த நலனை ஈடேற்றுவதற்காக மூடுவிழா முயற்சியை மேற்கொண்டிருந்தனர். ஆனால் அப்போது அது கை கூடவில்லை.

உயர் கல்வி அதிகாரிகள் பலர் குறிப்பிட்ட பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியதால் இதனை மூடுவதில் ஆர்வம் கொண்டோரின் முயற்சி பலனளிக்கவில்லை.

அதிகாரிகள் இன்று வருவார்கள் நாளை போவார்கள். ஆனால்தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள இந்தப் பாடசாலைகள் எமதுசந்ததியின், எதிர்காலச்சந்ததியின் பூர்வீகச் சொத்து. யாரும்இதனை மறுக்க முடியாது.

நமது சுயநலம் தமது எதிர்காலச் சந்ததியினரின் தலையில் மண்ணை அள்ளிப்போட வழிகோலக் கூடாது.

பாடசாலைகளை மூடுவதை விட பாடசாலைகளைத் தொடர்ந்து நடத்துவதைப்பற்றி இயன்ற அனைத்தும் செய்வதுதான் கல்வித்துறையில் சம்பந்தப்பட்ட அனைவரினதும் தலையாயகடமையாக இருக்க வேண்டும்.

பாடசாலைகளை மூடுவது வெகு சுலபம். ஆனால் அவற்றைத் தொடர்ந்து நடத்துவதில் தான் நமது திறமை இருக்கிறது.

இந்தப் பாடசாலைகளை மூடாமல் காப்பாற்ற எல்லோருக்கும் இயன்ற அனைத்தும் செய்வோமாக.

இது நவாலி மானிப்பாய் வாழ் மக்கள் ஒவ்வொருவரினதும் தலையாய பொறுப்பு.

க. கணேசலிங்கம்
(முன்னாள் அதிபர்)

யாழ்ப்பாணம்.

# இழுத்தடிக்கப்பட்டுவரும் தொண்டராசிரியர் நிரந்தர நியமனம்

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்களின் நிரந்தர நியமனம் நீண்டகாலமாக கல்வி அமைச்சால் இழுத்தடிக்கப்பட்டு வரும் பாரிய பிரச்சினையாகும். 1989 ஆம் ஆண்டுக்கு முன்னர் சேவையாற்றிய இத்தகைய ஆசிரியர்களின் ''ஏ'' பட்டியல், 'பி' பட்டியல் ஆகியவற்றில் அடங்கியவர்களுக்கு கல்விச் சேவை ஆணைக் குழுவினரால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. 'சி' பட்டியலில் உள்ளவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆனால் இப்பட்டியலில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற சில திடீர் சொருகல்கள் காரணமாக இன்றுவரை இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. இந்த நிலை தற்பொழுதுள்ள தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமன விடயத்தில் ஏற்பட்டு விடுமோ என ஐயுற வேண்டியுள்ளது.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தளவில் 1995 ஆம் ஆண்டில் நடைபெற்ற பாரிய இடப்பெயர்வுக்கு முன் இத்தகைய ஆசிரியர்கள் தான் பல பாடசாலைகளில் கற்றல், கற்பித்தலுக்கும் இணைப்பாடங்களின் செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்தார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. இத்தகைய தொண்டர் ஆசிரியர்களில் நீண்டகாலமாகச் சேவையாற்றியவர்கள் புறக்கணிக்கப்பட்டு அண்மைக்காலங்களில் புதிதாகப் பாடசாலைகளில் கடமையாற்றி வருபவர்களுக்கு நியமனம் வழங்க சகலதரப்பினரும் நடவடிக்கை எடுப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இவ்வாசிரியர்களுக்கான நிரந்தர நியமனத்தில் மாணவர்களின் தொகைக்கேற்ப ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதும், போட்டிப் பரீட்சை மூலம் தான் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்பதும் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களாகும். எனவே சம்பந்தப்பட்ட அனைவரும், முக்கியமாக பாடசாலை அதிபர்கள் மாணவர்களின் தொகைக்கேற்ப ஆசிரிய வெற்றிடங்களை சுற்றறிக்கைகளுக்கு அமைவாக தீர்மானித்து தொண்டர் ஆசிரியர்களாக இருக்க வேண்டியவர்களின் தொகையை வழங்குவது பொருத்தமானதாகும். வெற்றிடங்களைத் தீர்மானிக்கும் போது நீண்டகாலமாகச் சேவையாற்றியவர்களும், நீண்டகாலமாகச் சேவையாற்றி இடைவிலகியவர்களும் உள்ளடக்கப்பட வேண்டியது முக்கியமானதாகும். எனவே இவ்விடயத்தில் முன்னைய ''சி'' பட்டியலுக்கு ஏற்பட்ட நிலைமை மீண்டும் ஏற்படாது இருக்க பார்த்துக் கொள்ள வேண்டியது சம்பந்தப்பட்ட அனைவர்களதும் கடமையாகும்.

த. பஞ்சலிங்கம்
சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் ஒளி நூலகம்

### முப்பத்தாறு வருடங்களுக்கு முன்....

# இரு மாதங்களுக்கு மேலாக அரசை முடக்கிய சத்தியாக்கிரகப் போர்!

தமிழர்கள் தங்கள் உரிமைகளுக்காகச் சாத்வீக வழிகளில் நடத்திய போராட்டங்களில் 1961 ஆம் ஆண்டின் சத்தியாக்கிரகம் பெரும் உத்வேகத்துடன் நடைபெற்றது.

அவசர காலச் சட்டத்தைப் பிறப்பித்து, இராணுவத்தின் உதவியுடன் அந்தப் போராட்டம் ஒடுக்கப்பட்டது.

சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்துவித்த தந்தை செல்வாவின் நூற்றாண்டு வருடமான இப்போது —

அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட ஏப்ரல் 17 ஆம் திகதியைப் பின்னோக்கிப் பார்க்கின்றார் கட்டுரையாளர்:

சா. ஆ. தர்மரத்தினம்

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உலகின் முதல் பெண் பிரதமராக வர உதவியவர் தந்தை செல்வாவே ஆவார். டட்லி சேனநாயக்காவின் சிறுபான்மை அரசு நாடாளுமன்றத்தில் எதிர்கொண்ட அதன் முதல் வாக்கெடுப்பிலேயே தோல்வியடையச் செய்தவர் தந்தை செல்வா. ஒரே ஆண்டில் நாடு எதிர்கொள்ள நேர்ந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் (1960 ஜுலையில்) தமது கட்சி பதவியில் அமர்த்தப்பட்டால், பிராந்திய சபைகளுக்காகத் தமது மறைந்த கணவர் பண்டாரநாயக்கா செய்து கொண்ட "பண்டா — செல்வா" உடன்படிக்கையைத் தமது அரசு நடைமுறைப்படுத்தும் என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தந்தை செல்வாவுக்கு உத்தரவாதம் அளித்திருந்தார்.

அதனை முன்வைத்து சிறிமாவோ நாட்டைத் தமிழரசுக் கட்சிக்கு விற்றுவிட்டதாக டட்லி சேனநாயக்கா நாடெங்கலும் பேரினவாதப் பிரச்சினையைக் கட்டவிழ்த்து விட்டிருந்தார். அதற்கு ஆப்பு வைப்பதாக "சமஷ்டி என்றால் என்ன? எது சமஷ்டியல்ல!" என்ற தலைப்பில் தமது சொந்தக் கையெழுத்துடன் மும் மொழிகளிலும் தந்தை செல்வா அச்சிட்டுத் தந்த துண்டுப் பிரசுரங்களைச் சிறிமாவோ தென் இலங்கையில் வாக்காளர் மத்தியில் விநியோகித்தார். அதன் துணையுடனேயே அவர் டட்லி சேனநாயக்காவின் இனவாதப் பிரசாரத்தை முறியடித்து உலகின் முதல் பெண் பிரதமராகப் பதவியேற்றார்.

அதனால் தான் அத்தேர்தலின் போது காங்கேசன்துறைத் தொகுதியில் தந்தை செல்வாவின் வெற்றி வானொலி மூலம் அறிவிக்கப்பட்டதும், தென் இலங்கையில் சிங்களவர் வெடி கொளுத்தி ஆரவாரித்து அவரது வெற்றியைக் கொண்டாடியிருந்தனர். மேலும் தேர்தலின் பின் நாடாளுமன்றம் கூடிய போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர் நாடாளுமன்றத்தைச் சூழ்ந்து கொண்டு "செல்வநாயகம் மாத்தையாவுக்கு ஜெயவேவா" என ஜெயகோஷம் எழுப்பவும் செய்தனர்.

### ஏப்ரல் பதினேழில்

கொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டு, சிங்களம் மட்டும் சட்டம் நீதிமன்றங்கள் வரை விஸ்தரிக்கப்பட்ட போது, வடக்கு — கிழக்கு மாகாணங்களில் அரசு இயந்திரத்தை இரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு ஸ்தம்பிக்கும்படி முடங்க வைத்தார் தந்தை செல்வா. அதற்காக 1961 ஏப்ரல் 17 ஆம் திகதி அவசர கால நிலைமையையும், அதனோடு சேர்த்து 48 மணி நேர ஊரடங்குச் சட்டத்தையும் அறிவித்து, தந்தை செல்வாவையும் ஏனைய தலைவர்கள், தொண்டர்களையும் பனாகொட இராணுவ முகாமில் தடுப்புக்காவலில் வைத்தார் திருமதி சிறிமாவோ அம்மையார்.

அவரது கணவர் பண்டாரநாயக்காவின் ஆட்சியின் போதும் தந்தை செல்வா ஒரு தடவை வீட்டுக் காவலிலும், ஸ்ரீ அழிப்புப் போராட்டம் காரணமாக இரு வாரங்கள் மட்டக்களப்பு சிறையிலும் அடைக்கப்பட்டமை நினைவு கூரத்தக்கது,

அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்ட பின்னர் வடக்கு — கிழக்கு அடங்கலும் மறியல் போராட்டம் ஏனைய இடங்களில் அமைதியாகவே முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. எனினும் யாழ்ப்பாணத்திலோ வேறு விதமான அடாவடித்தனங்கள் இராணுவத்தினரால் கையாளப்பட்டிருந்தன.

யாழ். குடாநாட்டு மக்களுக்கு ஏப்ரல் 17 ஆம் திகதி நள்ளிரவில் யாழ். கச்சேரிச் சூழலில் என்ன சம்பவித்தது என்பதே தெரியாதிருந்தது. வழமைபோல் ஏப்ரல் 18 ஆம் திகதி கடமைக்குச் செல்ல ஆயத்தமான யாழ். மாநகர ஊழியர்களுக்கோ அங்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. "48 மணி நேர ஊரடங்குச் சட்டம் நேற்று நள்ளிரவு 12 மணிக்கே பிறப்பிக்கப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளபோது நீங்கள் எங்ஙனம் கடமைக்கு வந்திருக்கலாம்?" என்று அப்போதைய மாநகர ஆணையாளர் ஏ. வி. சின்னையா அன்புடன் கடிந்து கொண்ட போதே, ஊழியர்களால் நிலைமையை ஓரளவேனும் புரிந்து கொள்ள முடிந்தது.

அப்போதைய மாநகர முதல்வர் தா. ச. துரைராசாவும் தடுப்புக்காவல் கைதிகளுள் ஒருவராக பனாகொடைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்ற செய்தியும் அவர்களுக்கு பெரு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இத்தனைக்கும் அவர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவரோ அல்லது மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவரோ அல்லர். சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்களுக்கு குடிப்பதற்காக தண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகள், மின்சார வெளிச்சம் போன்றவற்றை நகரபிதா என்ற வகையில் ஏற்படுத்திக் கொடுத்ததே அவர் செய்த பெருங்குற்றமாகும்!

### நள்ளிரவில் நடந்தவை

பதினேழாந் திகதி தந்தை செல்வாவும் ஏனையோரும் கைதான இரவு .. நள்ளிரவு வேளை அலையலையாக யாழ்ப்பாணப் படமாளிகைகளில் இருந்து மக்கள் கூட்டம் யாழ். கச்சேரியை நாடிற்று. கச்சேரியின் சூழல் எங்கும், இராணுவக்காவல். கச்சேரியிலிருந்து இராணுவக் கும்பல் சடசடவெனச் சத்தியாக்கிரகிகளை நாடிச் சென்றது. இரத்த ஆறு ஓடச் செய்வதே அவர்கள் நோக்கமாக இருந்திருத்தல் வேண்டும். ஒரு சத்தியாக்கிரகியை நான்கு இராணுவ வீரர் வீதம் தாக்கினர். அப்போது அங்கே நின்ற உடுப்பிட்டி சிவசிதம்பரமும், வழக்கறிஞர் நடராசாவும் கூட பலத்த தாக்குதலுக்கு ஆளாகினர்.

"எழுந்து செல்லுங்கள், எழுந்து செல்லுங்கள்" என்று பெண்களிடம் கூறப்பட்டது. பெண் சத்தியாக்கிரகிகளோ அசையவில்லை. அடுத்து கடும் தொனியில் கோபத்துடன் கூறப்பட்டது. பெண்கள் அப்போதும் அசையவில்லை. பெரியதொரு ஜீப் வண்டி அவர்களை அணுகியது. அப்போதும் பெண் சத்தியாக்கிரகிகள் அசையவில்லை. பெண்களின் வீரத்தையும், உறுதியையும் கண்ட இராணுவமே ஆச்சரியம் அடைநதது. பெண்களைத் தூக்கி வண்டியிற் போட இராணுவம் முனைந்த போது பெண்கள் தாமாகவே வண்டியில் ஏறினர். வண்டியில் கூட அவர்களது சத்தியாக்கிரகப் பாடல் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

தலைவர்கள் கைதாகியதும் வடபகுதியில் பயணச் சீட்டுப் பெறாது அரசின் போக்குவரவுச் சேவைகளில் பயணம் செய்யும் சட்ட மறுப்பு இயக்கம் பரவலாக மேற்கொள்ளப்பட்டது. முதன்முதலாக அரசியலில் தலைமறைவு வாழ்வு தலைகாட்டியதும் அப்போது தான். கைது செய்யப்பட்டு பனாகொட இராணுவ முகாமுக்கு கொண்டு போகப்பட்டோர் வரிசையில் இரும்பு மனிதர் டாக்டர் நாகநாதன் இடம் பெற்றிருக்கவில்லை. ஆகவே அவருக்கு என்ன நேர்ந்தது? நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டால் பத்து நாள்களுக்குள் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டு அதனை விவாதிக்க வாய்ப்பளித்தல் வேண்டும். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அரசின் அடாவடித்தனத்தை உலகுக்குத் தெரியப்படுத்த அவாவினார் டாக்டர் நாகநாதன். நாடாளுமன்றத்தினுள் உறுப்பினர்களைக் கைது செய்யவியலாது. மதகுரு வேடம் பூண்டு ரயில் மூலம் மாறுவேடத்தில் டாக்டர் நாகநாதன் கொழும்பு செல்லப் புறப்பட்டார். ஊரடங்கு வேளையில் ரயில் ஓட்டம் தடைப்பட்டு இருந்தமையால் மோட்டார் வண்டியால் பூநகரி - மன்னார் பாதையூடாக பயணம் செய்ய முயன்றார். அங்கும் இராணுவ நடமாட்டம் வியாபித்திருந்தமையால் அவரது எண்ணம் கைகூடவில்லை.

ஆகவே, அந்நியாவசியமாக செய்யப்பட வேண்டிய இயக்கப் பணிகள் சிலவற்றை முடித்துக் கொண்டதும் சில தினங்கள் கழித்து, தமது சொந்த இல்லத்தில் வைத்தே சி ஐ டி. அதிகாரியாகிய தமது மருமகன் நதானியேல் மூலம் சரணடைந்தார் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன். தமிழ் அரசியலில் முதல் தலைமறைவு இவ்வாறே முற்றுப்பெற்றது.

### பாடசாலை பகிஷ்கரிப்பு

வடக்கு - கிழக்கு மாகாணமெங்கும் அராஜகம் தலைவிரித்தாடிய ஏப்ரல் 17 ஆம் திகதியை அடுத்து வந்த ஒவ்வொரு 17 ஆம் திகதியிலும் பாடசாலைகள் பகிஷ்கரிக்கப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. உண்ணாவிரதத்துடன் சிலர் மௌனவிரதமும் அனுஷ்டித்தனர். ஊரடங்கு வேளையில் பொது வழிபாட்டிடங்களில் சர்வமத வழிபாடுகளும் இடம்பெற்றன.

இக் காலகட்டத்தில் தமிழ்ப் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ அட்டூழியங்களைத் தோழர் எட்மன் சமரக்கொடி அவ்வப்போது நாடாளுமன்றத்தில் வைத்து அம்பலப்படுத்தி வந்தார். தலைநகரில் இருந்த இராஜதந்திர வட்டாரங்களுக்கு நாட்டு நடப்பை அறிவிக்கும் பொருட்டாக மாதம் இருமுறை 'சத்தியாக்கிரக' எனும் பெயரில் ஆங்கிலத்தில் ஓர் ஏடு இரகசியமாக வெளிவந்து கொண்டிருந்தது. எங்கிருந்து எவரால் அந்த ஏடு வெளியிடப்படுகின்றது என்பது இறுதி வரை ஒரே மர்மமாகவே இருந்து வந்தமை சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

தந்தை செல்வா பிறந்த நூற்றாண்டு விழாவின்போது தந்தை செல்வாவின் அரசியல் வரலாறு விரிவாக எழுதப்பட வேண்டுவது எத்துணை அவசியமோ அது போன்றே போராட்ட வரலாற்றுடன் தொடர்புடைய "சத்தியாக்கிரக" ஏட்டினது இதழ்கள் அத்தனையும் ஒரே தொகுப்பாக மறுவெளியீடு செய்யப்பட வேண்டுவதும் ஆவணச் சேகரிப்புக்கு அவசியமாகிறது.

பனாகொட இராணுவ முகாமில் இருந்த போது தந்தை செல்வாவின் உடல் நிலை பாதிக்கப்பட்டமையால் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் இருந்த அவரது இல்லத்துக்கு மாற்றப்பட்டார். அங்கு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். அப்போதும் அவரது உடல் நிலை பாதிக்கப்படவே செய்தது. இக்கால கட்டத்தில்தான் தந்தை செல்வா சத்திர சிகிச்சைக்கு ஆளாகும் பொருட்டு லண்டன் செல்ல அனுமதிக்கப்பட்டார். அங்கு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார் எனும் உத்தரவாதத்தின் மீதே அந்த அனுமதி அளிக்கப்பட்டது.

தந்தை செல்வா தமது வாழ்க்கையில் நடத்துவித்த நீண்ட நாள் போராட்டம் அவசரகால சட்டத்தால் இராணுவ நெடுபிடிகள் மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ★

# தனியார் சேவையில் மேலும் இரு கப்பல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 17

குடாநாட்டுக்கு கூடுதலான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வர தனியார் வர்த்தகர்கள் மேலும் இரு கப்பல்களை வாடகைக்கு அமர்த்தியுள்ளனர்.

தனியாருக்கான பொருள்களை எடுத்து வரும் பணியில் "அஸ்ரேரவியா", "ரியூனியன்", 'டொனாக்குழி' ஆகிய 3 கப்பல்களும் தற்சமயம் ஈடுபட்டுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக கூடுதலான தனியார் பொருள்களை எடுத்து வருவதற்காக "மேர்க் கண்டி" என்னும் கப்பலும் வாடகைக்கு அமர்த்தப்பட்டு, தற்சமயம் அதில் பொருள் ஏற்றும் பணி கொழும்புத் துறைமுகத்தில் நடைபெற்று வருகிறது.

இன்னொரு கப்பலையும் வாடகைக்கு அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தனியாருக்குப் பொருள்கள் ஏற்றி வந்த '[illegible]' கப்பல் அரச, கூட்டுத்தாபனங்களுக்குரிய பொருள்களையே தற்போது ஏற்றி வருவதாலும் —

'சுஜிந்த' என்ற கப்பல் பயணிகள் சேவையில் ஈடுபடுவதாலும் தனியாருக்கு பொருள்கள் ஏற்றி வர புதிய கப்பல்கள் வாடகைக்கு அமர்த்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — கூடுதலான கப்பல்களை பருத்தித்துறையில் [illegible] அங்கு பொருள்களை இறக்கும் பணி விஸ்தரிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## யாழ். நகரில் போக்குவரத்து நெருக்கடி அதிகரிப்பு

யாழ். நகரில் வாகனப் போக்குவரத்தும் நெரிசலும் அதிகரித்திருக்கிறது. இதனால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாக நேரிடுகிறது.

பல்வேறு தேவைகளுக்காக நகருக்கு வரும் மக்களின் எண்ணிக்கையும், போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களின் எண்ணிக்கையும் முன்னரைவிட தற்போது அதிகரித்துள்ளன.

இதேவேளை — போக்குவரத்துக்குப் பயன்படும் பிரதான வீதிகள் சில பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்டுள்ளன.

முன்னர் ஒருவழிப் பாதைகளாக விளங்கிய சில வீதிகளிலேயே இப்போது அதிக நெரிசல் ஏற்பட்டிருக்கிறது.

நகரில் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்க்க குறிப்பிட்ட வீதிகளில் ஒருவழிப் பாதை முறையை மீண்டும் அமுல்படுத்த வேண்டும் என யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசங்களின் சம்மேளனம் யாழ். மாநகர ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சம்மேளனத்தால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அக்கடிதத்தின் பிரதிகள் 512 ஆவது படையணியின் தளபதி, யாழ். அரச அதிபர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஐ-135)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கடைக்குரிய கண்ணாடி இறாக்கைகள், யப்பான் ஏசியா ஆண், பெண் துவிச்சக்கரவண்டிகள், குளிர்சாதனப்பெட்டி, வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சீலன், இல. 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். [46381]

### தேவை

கோடியல் மற்றும் திருகு மூடியுடன் ஜாம் போத்தல்கள் தேவை. தொடர்பு கொள்ளும் முகவரி:- ரேஸ்றலைன் இன்டஸ்றீஸ் (தனி) லிமிட், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. [46331]

### தவறிவிட்டன

வின்சன் சுதர்சிங் என்பவரது இல, 633121226V தேசிய அடையாள அட்டையும், மற்றும் 647092756V இலக்க தேசிய அடையாள அட்டையும், வேறு இரண்டு அடையாள அட்டைகளையும் கொண்ட பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 2 ஆம் நம்பர் இறைச்சிக்கடை, சின்னக்கடை என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். [46380]

### நூலாலயம்

'நூலகம் அறிவின் தாயகம்' ஈழத்து - தமிழகப் படைப்பாளிகளின் புதிய வெளியீடுகளை வாசித்துப் பயனடைய விஜயம் செய்யுங்கள்: லிங்க் லெண்டிங் லைப்ரறி, Ling Lending Library, சாவகச்சேரி. (45932)

அருணாசலம் திருநாவுக்கரசு என்பவரது 262031293V இலக்க தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பவற்றுடன் கைக்கடிகாரமும் எனது இல்லத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 40/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [46386]

### வாடகைக்கு

யாழ். நகரில் நிரந்தர வேலை பார்ப்பவருக்கு அறை வாடகைக்குண்டு. இரண்டு பேர் Share பண்ணி இருக்க வேண்டும். வாடகை 200/- முற்பணம் 600/- தொடர்பு; ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி ஜெயந்தி ஸ்ரோர்ஸ், 426' (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [46393]

திருநெல்வேலி கிழக்கு, சட்டநாதர் வீதியில் மூன்று அறைகளைக்கொண்ட சகல வசதிகளுமுடைய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: பொ, அன்னலட்சுமி, கலாமன்றம் முன்பாக, சட்டநாதர் வீதி, நல்லூர். [46394]

## இடிபாடுகள் இடையே விஷப் பாம்புகள்

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ். மத்தியகல்லூரியில் சேதமடைந்த கட்டடங்களை புனரமைப்பதற்காக கட்டட இடிபாடுகளை அப்புறப்படுத்தும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இக்கட்டட இடிபாடுகளிடையே 7 விஷப் பாம்புகள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. அவை உடனேயே அடித்துக்கொல்லப்பட்டன. (ஐ-173)

---

உ
சிவமயம்

## குப்பிளான் நாகபூஷணி அம்பாள்
கட்டட நிதிக்கான
## அதிர்ஷ்ட இலாபச் சீட்டு முடிவுகள்

1 ஆம் பரிசு 2309
2 ஆம் பரிசு 968
3 ஆம் பரிசு 131

ஆறுதல் பரிசில்களுக்குரிய எண்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | 1482 | (2) | 1501 | (3) | 3644 |
| (4) | 48 | (5) | 663 | (6) | 1341 |
| (7) | 682 | (8) | 3672 | (9) | 1418 |
| (10) | 215 | | | | |

பரிசில் களுக்குரியவர்கள் வரும்வெள்ளிக்கிழமை அன்று பி. ப. 3-00 மணிக்கு ஆலயத்துக்கு வந்து பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும்.

(46391) - ஆலய நிர்வாகத்தினர்

---

## ஈராண்டு நினைவலைகள்



பிறப்பு: 15 – 08 – 1939

இறப்பு: 17 – 04 – 1995

## திருமதி மரியசீலி சின்னப்பு
(றோஸ்மலர்)

''ஆதாமில் அனைவரும் இறந்தது போல, கிறிஸ்துவில் எல்லோரும் உயிர் பெறுவர்.''

1 கொரி. 15: 22- 23

- குடும்பத்தினர்.

100, பழைய பூங்காவீதி,
யாழ்ப்பாணம்.

(46377)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## மினாசி வாரித்தம்பி

தோற்றம்: 15 - 07 - 1935

மறைவு: 13 - 04 - 1996

மினாசி வாரித்தம்பி அவர்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு காலம் சென்றபோதும், இவரை நினைத்து வாடும் இவருடைய அன்பு மனைவி பவளம்மா, பாசமிகு பிள்ளைகள் செல்வராணி, தேவராணி, விமலராணி, மனோகரன், கருணா (சுவிஸ்), மருமக்கள் கனகரத்தினம், ராதாகிருஷ்ணன் மருமகள் பவானி(சுவிஸ்) ஆகியோரும் பேரப்பிள்ளைகளும், உற்றார், உறவினரும் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
அ. செல்வராணி

கைதடி வடக்கு,
கைதடி.

(9517)

---

## ஜனாதிபதியையும் யாழ். மாணவர் சந்திப்பர்

யாழ்ப்பாணம், ஏப். 16

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் தென்பகுதியில் கல்விச் சுற்றுலா மேற்கொள்ளவிருக்கும் யாழ். மாணவர்கள் ஜனாதிபதியையும் சந்தித்துப் பேசுவர் என்று அறியவந்துள்ளது.

1996 ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையில் '4ஏ' சித்தி பெற்ற 14 மாணவர்களும் எதிர்வரும் 21 திகதி முதல் 28 ஆம் திகதி வரை தெற்கில் கல்விச் சுற்றுலா மேற்கொள்ளவுள்ளனர்.

இவர்கள் கதிர்காமம், பண்டாரவளை, நுவரெலியா, கட்டுநாயக்க வர்த்தக வலயம் உட்பட பல இடங்களையும் பார்வையிடுவர்.

## யாழ். பிரதம தபாலகத்துக்குரிய தளபாடங்கள் வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தின் பாவனைக்கென கொழும்பில் இருந்து கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட தளபாடங்கள், இரும்புப் பெட்டிகள் மற்றும் பூட்டு வகைகள் என்பன இன்னமும் இங்கு வந்து சேரவில்லை.

இப்பொருள்களுடன் கொழும்பில் இருந்து கடந்த மூன்று வாரங்களுக்கு முன் புறப்பட்ட ''லங்கா முடித'' கப்பலின் பயணம் இடைவழியில் தடைப்பட்டது.

இதனால் தபாலகத்துக்குரிய பொருள்கள் திட்டமிட்டபடி வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

---

ஓம் ஸ்ரீ சாயிராம்

## ஸ்ரீ சத்திய சாயி சேவா ஸ்தாபனம்
## சிறுவர் தினவிழா

இடம்: ஸ்ரீ சத்திய சாயி நிலையம், யாழ்ப்பாணம்.
(யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் முன்பாக)
சேர். பொன். இராமநாதன் வீதி

நாள்: 19-04-97 சனிக்கிழமை

நேரம்: மு. ப. 9-30 மணி (புதிய நேரம்)

சிறுவர் கலை நிகழ்ச்சிகள், சாயி ஆன்மீகக் கல்வியில் சித்தியெய்திய மாணவர்களுக்கும், கட்டுரைப் போட்டியில் சித்தியெய்தியவர்களுக்கும் சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்குதல் நடை பெறும்.

**சாயி நூல்கள் விற்பனைக்குண்டு**

அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்

வட பிராந்திய ஸ்ரீ சத்திய சாயி
சேவா ஸ்தாபனம்,
யாழ்ப்பாணம்.

(46374)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழக
புதிய துணைவேந்தர்
பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை
அவர்களையும்
புதிய கலைப்பீடாதிபதி
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
அவர்களையும்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிச் சமூகம்
அவர்தம் பணி சிறக்க
வாழ்த்தி வரவேற்கிறது

**யாழ். மத்திய கல்லூரிச் சமூகம்.**

(சி-512)

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
## திருமதி இராசா சரஸ்வதி

தோற்றம்: 19-11-1934

மறைவு: 17-04-1993

பாசத்தின் உறைவிடமே!
நெஞ்சிலே இட்ட நெருப்பு
தண்ணீராலும் அழியாது;
செந்நீராலும் அழியாது.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்.

குப்பிழான் வடக்கு,
ஏழாலை.

(46395)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

# உதயன்

## ஒய்யாரக் கொண்டை!

வெளி இடங்களில் இருந்து யாழ்ப்பாணம் வருவோர் இங்கு மக்கள் இயல்பு வாழ்க்கை நடத்துவதாகக் கருதுகிறார்கள்.

வெளித் தோற்றத்துக்குத் தான் அவ்வாறு தெரிகின்றதே அன்றி மக்கள் எத்தனையோ வகைக் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் என்று பல விடயங்களைப் பிய்த்துப் பிய்த்துக் கூறி விளங்கப்படுத்தினால் தான் அவர்களுக்கு உண்மை நிலை தெரிகிறது.

உணவு மற்றும் பாவனைப் பொருள்களின் தாராளமும் அநியாய அதிஉச்ச விலைகளும் அத்தகைய விடயங்களில் ஓர் அலகு.

ஆரம்பத்தில் – கடந்த மே, ஜூன் மாதங்களில் — உணவு மற்றும் பாவனைப் பொருள்களுக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவியது. இப்போது அவற்றைத் தாராளமாகக் காண முடிகிறது. அரசாங்கம் யாழ். மக்களின் நலனில் கொண்டுள்ள அக்கறையை இது காட்டுகிறதல்லவா என்று வெளியில் இருந்து வந்த ஒருவர் கேட்டார்.

ஆம். யாழ்ப்பாணத்து உணவு மற்றும் பாவனைப் பொருள்களின் சந்தை, வெளித் தோற்றத்துக்கு அப்படித் தான் உள்ளது. ஒய்யாரக் கொண்டையிலே தாழம் பூவாம்; அதன் உள்ளே இருப்பதுவோ ஈரும் பேனாம் — என்ற நிலை தான் இது.

யாழ்ப்பாண நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டது போல —

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது நிலைமை சீராகிவிட்டது போலவும், பொருள்கள் தாராளமாகவும் நியாயமான விலையில் கிடைப்பது போலவும் தோற்றம் தருகிறது......

...உண்மையில் நுகர்வோர் நலனைக் கருத்திற்கொண்டு பார்க்கும் போது பல குறைபாடுகளை அறியமுடிகிறது — என்பதே சரியான நிலை.

மக்கள் நலனில் அக்கறை கொண்ட அரச அதிகாரிகள், வர்த்தகர்கள், கூட்டுறவாளர்கள் இப்போது குடாநாட்டில் அரிதாகிவிட்டனர். அதனாலேயே இக்குறைபாடுகள் என்ற உண்மையையும் மிக அப்பட்டமாக எடுத்துச் சொல்லியுள்ளது.

உணவுப் பொருள் விநியோகம், சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் மக்கள் நலலனைப் பேணும் சட்ட விதிகள் பல உண்டு. ஆனால் அவை இங்கு அமுலாகுவதாகவும் இல்லை.

பொருள்களின் விலை உயர்வுகளுக்குச் சப்புக் கொட்டப்படும் காரணங்களும்' பொருள்களுக்கு இடைக்கிடை உருவாக்கப்படும் செயற்கைத் தட்டுப்பாடுகளும் சமூக நலன் மறந்த அரசதுறையும், வர்த்தகத்துறையும் கைகோர்த்து நிற்கின்றனவோ என்ற சந்தேகத்தையே எழுப்புகிறது.

இவ்வாறு சந்தேகப்பட்டுக் கொண்டிருப்பதால் ஆகப் போவது எதுவும் இல்லை. மக்கள் தரப்பில் விழிப்புணர்வு தேவை. வெறும் அறிக்கைகளும் தரவுகளும் உதவுவதை விட மக்களது விழிப்புணர்வும், நேரடி நடவடிக்கையுமே சிறந்த பலனைத் தரும்.

தலையிடியும் காய்ச்சலும் அவரவருக்கு வந்தால்தானே தெரியும். இப்போது தலையிடியால் அவஸ்தைப்படுவோர் நுகர்வோரே. எனவே அவர்கள் தான் செயலில் இறங்க வேண்டும்.

# காணாமற்போனோர் உறவினர்; தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 17

குடாநாட்டில் கைதாகிபின்னர் காணாமல் போனவர்கள் தொடர்பாக மேல் நடவடிக்கைகள் எடுப்பதற்காக காணாமற் போனவர்களின் உறவினர்கள் நாளை காலை 10 மணிக்கு சங்கத்தின் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கைதானோர், காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் கோரியுள்ளது.

''சூரியப்பிரகாசம் 2'' நடவடிக்கையின் பின் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் தொடர்பாக ஆள்கொணர்வு மனுத் தாக்கல் செய்யவும்—

இந்த விடயம் சம்பந்தமாக யாழ். இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விவரம் அறிந்து கொள்ளவும்—

தேசிய மனித உரிமை ஆணைக் குழுவினருடன் தொடர்பு கொள்ளவும்— விவரங்களை சமர்ப்பிக்கும் வகையில் நாளை காலை வருமாறு உறவினர் அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைப்பின் தலைமைக் காரியாலயம் 342, ஸ்ரான்லி வீதியில் இயங்கிவருவதுகுறிப்பிடத்தக்கது. (இ–3)

## கொழும்பு பத்திரிகையாளர் வருகை

வடமராட்சி, ஏப். 17

கொழும்பிலிருந்து உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர் குழு ஒன்று கடந்த புதுவருடதினத்தன்று யாழ்ப்பாணம் வந்திருந்தது.

இக் குழுவினர் யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து தகவல்களைச் சேகரித்தனர்.

புத்தாண்டு தினத்தன்று இரவே இக் குழுவினர் கொழும்பு திரும்பிச் சென்றனர். (ஐ-173)

## கல்விச்சுற்றுலா

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ். வலயம் இரண்டில் 4 'ஏ' விசேட சித்திகள் பெற்ற மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா தொடர்பான அரச அதிபருடனான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வலயம் இரண்டின் கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

மேற்படி சுற்றுலாவுக்குத் தகுதிபெற்று தமது பெயர்களை கல்விப்பணிப்பாளரிடம் சமர்ப்பித்த மாணவர்கள் அன்றைய தினம் தவறாது சமுகமளிக்குமாறு வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## வன்னியிலிருந்து 10 குடும்பங்கள் வேலணைவந்தன

முழங்காவில் பிரதேசத்தில் இருந்து 10 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேர் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள வேலணை தெற்குப்பகுதிக்கு நேற்று முன்தினம் வந்து சேர்ந்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 5.30 மணியளவில் 4 வள்ளங்களில் இவர்கள் வந்து சேர்ந்தனர். (இ-4)

# சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 17

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின யாழ். மாவட்டத் தொகுதி அமைப்பாளர்கள், வாலிப முன்னணித் தலைவர்கள், கட்சியின் பொது அங்கத்தவர்கள் ஆகியோருக்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு (புதிய நேரம்) யாழ். முதலாம் குறுக்குத்தெரு, 183 ஆம் இலக்கத்தில் உள்ள கட்சிப் பணிமனையில் நடைபெறும் என்று கட்சி ஒருங்கிணைப்பாளர் அறிவித்திருக்கின்றார். (உ)

## அதிபர் கூட்டம்

வலிகாமம் தெற்கு, ஏப். 17

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. கணேசலிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-152)

## ஸ்கந்தா மாணவருக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 17

ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் கல்லூரி மாணவர்களுக்கும், ஆசிரியர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் இலவசமாக அப்பியாசக் கொப்பிகளும், கல்லூரி வரலாறு மற்றும் கல்லூரி நாள் காட்டியும் வழங்கப்பட்டன.

மறைந்த சரா. சேதுகாவலர், இரா. சுகுணசுந்தரா ஆகியோரின் ஞாபகார்த்தமாக இவை வழங்கப்பட்டன.

இந்த அன்பளிப்பு வழங்கப்பட்ட வைபவத்தில் கல்லூரி அதிபர் ஆ. கமலநாதன், பழைய மாணவர் சங்கத் தலைவர் எம். சத்தியபாலன், செயலாளர் சேதுவிபுலானந்தா, பொருளாளர் த. அ. செல்வராசா, கல்லூரி அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஆ. சி. கணேசவேல் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இதே வேளை—

இக் கல்லூரியில் கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கு பழைய மாணவர் சங்கத்தால் ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்பட்டது. (ஐ-3)

## ஆசிரியருக்கான அறிமுகமும் செயலமர்வும்

யாழ்ப்பாணம், ஏப். 17

சங்கானை கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கான ஆண்டு 5 புதிய பாடத்திட்ட அறிமுகமும் செயலமர்வும் எதிர்வரும் 19ஆம் 20ஆம் 21ஆம் திகதிகளில் சித்தன்கேணி கணேச வித்தியாசாலையில் நடைபெறும்.

ஆண்டு 5இல் மொழி, கணிதம், சுற்றாடற்கல்வி, ஆரம்ப விஞ்ஞானம், ஆக்கம், அழகியல் ஆகியவை கற்பிக்கும் ஆசிரியர்களை மேற்படி பயிற்சி வகுப்பில் தவறாது கலந்து கொள்ளும்படி ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் கேட்டுக்கொள்கிறார். (இ-4)

## நாளை

**சித்திரை 5**

**வெள்ளிக்கிழமை**

**திதி:** ஏகாதசி முன் இரவு 8. 24 வரை.

**நட்சத்திரம்:** மகம் பிற்பகல்: 1.19 வரை

ஏகாதசி விரதம்

**சுபநேரம்:** 6.03-7.33

**ராகுகாலம்:** 10.35-12.05

([illegible] பழைய நேரப்படி)

## குழுநிலை ஆய்வு

கொழும்புத்துறை, ஏப். 17

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களின் புனர்வாழ்வுக் கருத் திட்டங்கள் தொடர்பான குழு நிலை ஆய்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பணிமனையில் நடைபெறவுள்ளது. (ஐ–30)

# கிடங்கில் போட...

(முதலாம் பக்கத் தொடர்)

பதில் நீதிவான் சுபாஜினி வரதன் முன்னிலையில் திருமலை நீதிமன்றத்தில் நடைபெற்றது.

விசாரணையைப் பார்க்க ஏராளமானவர்கள் நீதிமன்றத்தில் கூடியிருந்தனர்.

வெங்கடராமன் பாலமுரளி தமது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:-

'' சம்பவத்துக்கு முன்னர் 2 மாத காலமாக பிரதம குருக்கள் மனமுடைந்து காணப்பட்டார்.

'' எங்கேயாவது ஓடிப் போக வேண்டும். இல்லையேல் அம்மாவைக் கொலை செய்ய வேண்டும்'' என்று 4 அல்லது 5 தடவைகள் அவர் என்னிடம் கூறினார்.

சம்பவ தினமான 13-5-96 இல் என்னை வீட்டுக்கு வருமாறு அவர் அழைத்தார். அங்கு சென்ற நான் அங்குள்ள ஒரு சிறு மதிலில் குந்திக் கொண்டிருந்தேன்.

அந்தச் சமயம் குசினிக்குள் குருக்களுக்கும் அம்மாவுக்கும் இடையில் சண்டை நடப்பதைக் கேட்கக் கூடியதாக இருந்தது.

அதன்பின் வெளியே வந்த அம்பிகா அம்மா எனக்குத் தேநீர் தருவதாகக் கூறி மீண்டும் குசினிக்குள் போனார்.

### குசினிக்குள் இருந்து அவலக்குரல்

அச் சமயம் கையில் குழந்தையுடன் நின்ற குருக்கள் குழந்தையைக் கீழே போட்டு விட்டு, நைலோன் கயிறு ஒன்றுடன் குசினிக்குள் போனார்.

குசினிக்குள் இருந்து '' ஐயோ '' என்ற அவலக் குரல் கேட்டது. அதன் பின்னர் ''ஆ'' என்று இரு தடவைகள் சத்தம் கேட்டது. நான் குசினிக்குள் ஓடினேன்.

பாத்திரம் கழுவிக் கொண்டிருந்த அம்மாவின் கழுத்தில் நைலோன் கயிற்றைப் போட்டு குருக்கள் இறுக்கிக் கொண்டிருந்தார். பின்னர் அம்மா மல்லாந்து வீழ்ந்து விட்டார்.

நைலோன் கயிற்றால் கழுத்தை இறுக்கிக் கொண்டு காலால் வலது தோளை அமர்த்தியபடிகுருக்கள் இருந்தார். அம்மா கயிற்றைக் கையால் பிடிக்க முனைந்து கொண்டிருந்தார். கால்கள் துடித்துக் கொண்டிருந்தன.

குழந்தை அழுததால், குழந்தையைத் தூக்கிக் கொண்டு கோயிலுக்குப் போய் கோயிலில் நின்ற பார்வதி என்ற பெண்ணிடம் குழந்தையைக் கொடுத்து விட்டு மீண்டும் குருக்கள் வீட்டுக்கு ஓடிவந்தேன்.

அப்போது தலையணை ஒன்று கொண்டு வருமாறு குருக்கள் என்னிடம் கூறினார். தலையணையை எடுத்துச் சென்று அவரிடம் கொடுத்து முகத்தில் வைத்து அழுத்துமாறு கூறினேன். அப்படியே அவர் முகத்தில் தலையணையை வைத்து அழுத்தினார்; அமுக்கினார்.

அதன்பின் அம்மாவின் கை தளர்ந்தது. அவரது உயிர் பிரிந்தது என்பதை அறிந்தேன்.

அதன்பின் நான் பகல் 2 30 மணியளவில் எனது அறைக்குச் சென்றேன். அன்று பிற்பகல் 4. 30 மணிக்கு சாயங்காலப் பூசை விசேட அபிஷேகத்துடன் நடக்க இருந்ததால், அறைக்குப் போய்க் குளித்து விட்டுக் கோயிலுக்குப் போய்விட்டேன்.

இப்படி அவர் கூறினார்.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு கொலை செய்துவிட்டு கோயிலில் பூசை செய்ய மனச்சாட்சி வந்ததா? என பதில் நீதிவான் சாட்சியைக் கேட்க ''பூசை செய்யக் கூடாது தான்'' என்று அவர் பதில் அளித்தார்.

பாலமுரளி தொடர்ந்து சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:-

மாலை 6 மணிக்கு ஆலயத்தில் பூசைகளை முடித்து விட்டு வீடு திரும்பினோம். கோயிலில் பூசை நடக்கும் போது குருக்கள் 2 அல்லது 3 தடவைகள் வீட்டுக்குச் சென்றார். முன்னரே தயாரித்து வைத்த பிரசாதங்களை அவர் வீட்டில் இருந்து கோயிலுக்கு எடுத்துவந்தார்.

மாலை 6 மணிக்கு வீடு திரும்பும்போது நான் அந்தப் பெண்ணிடம்முன்புகொடுத்த பிள்ளையையும் அவர் தூக்கிக் கொண்டு வந்தார்.

அதன்பின் வீட்டுக்கு வந்த குருக்கள் வீட்டில் இருந்த மண்வெட்டியை எடுத்து வீட்டுக்குப் பின்னால் கிடங்கு வெட்டினார். 5 அடி நீளமும், 3 அடி ஆழமும் கொண்டதாக வெட்டப்பட்ட அந்த கிடங்கு சரியாக வெட்டப்படாததால், கிடங்கின் அருகுகளை வெட்டி துப்புரவு செய்தேன்.

அதன்பின் குருக்கள் அம்மாவின் சடலத்தைப் பின்புறக் கதவால் ''தொற தொற'' என இழுத்து வந்தார். முதலில் தலையைக் கிடங்கில் போட்டு காலால் எஞ்சிய பகுதியை கிடங்கில் தள்ளினார். பின்னர் மண்போட்டு மூடினோம். நாய்கள் இழுத்துச் செல்லலாம் என்பதால் பெரிய 'ரம்' ஒன்றை அதன் மீது வைத்தேன்.

இதுபற்றி ஆலய நிர்வாகிகளிடம் எதுவும் நான் கூறவில்லை.

அம்மா எங்கே? என்று கேட்பவர்களிடம் ''அவ ஓடிப் போய்விட்டா'' என்று குருக்கள் கூறி வந்தார். அதனால் நானும் அப்படியே கூறிவந்தேன் — என்றார்.

''அம்பிகா இறந்த பின்னர் குருக்கள் குளித்து விட்டா கோயிலுக்கு வந்தார்?'' என்று கேட்டதற்கு, 'அவர் குளித்து விட்டு வந்தாரா என்பது எனக்குத் தெரியாது' என்று பதில் அளித்தார்.

கோணேசர் ஆலயத்தின் தற்போதைய குருக்களான குகானந்த சர்மா (27 வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

''வியாகேஸ்வர சர்மா குறித்து பல முறைப்பாடுகள் கூறப்படுகின்றன.

மது, மாது தொடர்புகள் உடையவர் என்று கூறப்படுகிறது. இவருக்கு ஒட்டோ சாரதி ஒருவர் உதவியாக இருந்தார் என கேள்விப்பட்டேன்'— என்றார்.

ஆலய மடப்பள்ளி ஐயரான க. குமாரசாமிக் குருக்கள் (70 வயது) என்பவரும் சாட்சியம் அளித்தார்.

மரண விசாரணை இன்று வரை ஒத்திப்போடப்பட்டது.

கோணேசர் ஆலயத்தின் முன்னாள் பிரதம குருக்களான வியாகேஸ்வர சர்மாவின் மனைவியான அம்பிகா கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டதும் —

நேற்று முன்தினம் குருக்களின் விடுதியின் பின்னால் புதைகுழியில் இருந்து அம்பிகாவின் மண்டை ஓடு, எலும்புகள் கைப்பற்றப்பட்டதும் — தெரிந்தவையே. (இ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் [illegible] நூலகம்.

# புலிகளுடன் தொடர்பு எதையும் ஜே. வி. பி. கொண்டிருக்கவில்லை

## அதன் பொதுச் செயலாளர் அறிக்கை

கோழும்பு, ஏப். 17

''விடுதலைப் புலிகளுடன் எந்த வித தொடர்பையும் ஜே. வி. பி. கொண்டிருக்க வில்லை. வருங் காலத்திலும் விடுதலைப் புலிகளுடன் எந்த வித உறவும் ஏற்படுத்திக் கொள்ளப்படமாட்டாது''

ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் டெல்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித் தார்.

ஜே. வி. பி. விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை கொண்டுள்ளது என்றும் — ஆயுதங்களைச்சேகரித்து வரு கின்றது என்றும் சிலர் கூறு வது தமது கட்சிக்கு தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதி யாகவும் அங்கீகாரம் கிடைப் பதைத் தடை செய்யும் நோக் கத்துடன் ஆகும் என்றுடெல் வின் சில்வா பத்திரிகை களுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

1994ஆம் ஆண்டில் அரசி யல் நீரோட்டத்தில் ஜே. வி. பி. இறங்கிய நாள் தொடக் கம் இத்தகைய தவறான குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டுவருவதாக அவர்மேலும் தெரிவித்தார். (இ-4)

## கலந்துரையாடல்

குரும்பசிட்டி நலிவுற்றோர் நலன்னோம்பு நிலையத்தில் முதியோர் நலன்னோம்புப் பிரிவு ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையா டல் எதிர்வரும் சனிக்கிழமை உருப்பராயில் இயங்கும் வசா விளான் மத்திய மகா வித்தி யாலயத்தில் நடைபெறும். (இ-135)

## சேத மதிப்பீடு

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் சுண் டுக்குளி மகளிர் கல்லூரிக்கு ஏற்பட்ட சேதங்களின் மொத்தப் பெறுமதி பத்து லட்சம் ரூபா என மதிப்பிடப் பட்டுள்ளது. (இ-173)

# அதிகரித்த விலையில் சாராயம் விற்பனை

கொழும்பில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபான வகைகள், சாராயம் என்பன யாழ்ப்பாணத்தில் இரு மடங்கு விலையில் அதற்கு மேலாக விற்கப்பட்டு வருவ தாக முறைப்பாடு தெரிவிக் கப்படுகின்றது.

நேற்று கல்வியங்காடு பகு தியிலுள்ள மதுபான விற் பனை நிலையம் ஒன்றில் 88 ரூபா பொறிக்கப்பட்ட அரைப் போத்தல் 'மெண் டிஸ் றெட் லேபல்' சாராயம் 190 ரூபாவுக்கு விற்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய இடங்களிலும் அதி கரித்த விலையில் இவை விற் கப்படுவதாகத் தெரிய வரு கின்றது. (இ-135)

# 'அலேர்ட்'டின் ஏற்பாட்டில் 5 நாள் சமாதான மாநாடு

## இன்று மணிலாவில் ஆரம்பமாகிறது

சர்வதேச ''அலேர்ட்'' நிறுவனம் ஏற்பாடு செய் துள்ள 5 நாள் சமாதான மாநாடு ஒன்று இன்று முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை பிலிப்பீன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவில் நடைபெறவுள்ளது.

இலங்கைக்கான சமாதான முயற்சிகளை மேற்கொள்ள வும் —

சர்வதேச ரீதியில் அதனை விரிவுபடுத்தவும் — ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம் மாநாட்டின் முதல் அமர்வு கடந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் கிறீஸ் நாட்டிலும் இரண்டாவது அமர்வு ஒக் ரோபர் மாதத்தில் அயர் லாந்திலும் இடம்பெற்றன.

மணிலாவில் இன்று ஆரம்ப மாகும் மாநாட்டில் இலங்கை யிலிருந்து 26 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர்.

ஆளும் கட்சியிலிருந்து 10 பேரும் எதிர்க்கட்சியிலி ருந்து 10 பேரும் இதரகட்சிக ளிலிருந்து 6 பேரும் இதற் கெனத் தெரிவாகியுள்ளனர்.

# பருத்தித்துறையில் இருந்து நெல்லியடிவரை வீதி விளக்கு

வடமராட்சி, ஏப் 17

பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி வரை வீதிவிளக்கு கள் அமைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறையிலிருந்து மந்திகை வரையிலான வீதி விளக்குகள் தினமும் மாலை 7 மணி முதல் அதிகாலை 5. 30 மணிவரை எரிகின்றன.

மந்திகையிலிருந்து நெல்லி யடி வரையிலான வீதி விளக் குகள் பரீட்சார்த்தமாக மாலை 7 மணி முதல் இரவு 11 மணிவரை இடையி டையே எரிந்து வருகின்றன.

இதேவேளை, பருத்தித் துறையிலிருந்து மந்திகை வரையிலான பிரதான வீதிக்கு இருமருங்கிலுமுள்ள வீடுகளுக்கு மின்சாரம் விநி யோகிக்கப்பட்டு வருகின் றது.

மந்திகைவரையிலான வீதி விளக்குகளுக்கும், வீடுகளுக் குமான மின்சாரம் பருத்தித் துறையிலுள்ள பாதுகாப்புப் படை முகாமிலுள்ள ஜென ரேட்டர் மூலம் வழங்கப் பட்டு வருகிறது.

மந்திகையிலிருந்து நெல்லி யடி வரையிலான பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள வீதி விளக்குகளுக்கு மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் இயங்கும் ஜென ரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. (இ-173)

# ஒலிபரப்பு அதிகார பீடம்: எதிர்த்து மற்றும் ஒரு மனு

ஒலிபரப்பு கட்டுப்பாட்டு அதிகாரபீடம் அமைக்கப்படு வதை ஆட்சேபித்து 'பிறீ மீடியா மூவ்மென்ற்' என்ற அமைப்பும் நேற்று மேல் நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

இது அரசமைப்புக்கு முர ணானது என்று கூறி, ஐ. தே க ஆதரவு தனிப்பட்ட ஒலி பரப்பாளர்கள் பலர் ஏற் கனவே மனுத் தாக்கல் செய் துள்ளனர்.

கருத்துச் சுதந்திரத்தை இந்த ஒலிபரப்பு அதிகார பீடம் கடுமையாகக் கட்டுப் படுத்துகிறது.

இந்த ஒலிபரப்பு அதிகார பீடத்துக்கு உறுப்பினரைத் தெரிவு செய்யும் உரிமை —

அவர்களை பதவியிலிருந்து இறக்கும் உரிமை — ஆகி யவை செய்தித்துறை, தக வல் தொடர்பு அமைச்ச ருக்கே வழங்கப்பட்டன.

''செய்தி அறிக்கை உள் ளிட்டவானொலி, தொலைக் காட்சி நிகழ்ச்சிகளின் சாராம் சம், சமபலம் எப்படியிருக்க வேண்டும் என்று இந்த அதி காரபீடம் உத்தரவுகளை விதிக்க சட்டத்தில் அனுமதி வழங்கப்படுகிறது.

தனியார் ஒலிபரப்பாளர் அனைவருக்குமான ஒலி பரப்பு அனுமதிகளை வழங்கு வதும் இந்த அதிகார பீடத் தின் பொறுப்பாக இருக்கப் போகிறது.

இப்படி ''பிறீ மீடியா மூவ் மென்ற்'' தெரிவித்துள்ளது. (இ-4)

# பழுதடைந்து வீதியில் நிற்கும் பஸ்கள்

## பயணிகள் பெரும் சிரமம்

வடமராட்சி, ஏப். 17

பருத்தித்துறை-யாழ்ப் பாணம் வீதியில் சேவையி லீடுபடும் வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் கள் அடிக்கடி பழுதடைந்து வீதிகளில் நின்றுவிடுகின்றன.

இதனால் பஸ்களில் பய ணம் செய்வோர் இடைவழி யில் தர்மசங்கடமான நிலையை எதிர்நோக்கவேண் டியுள்ளது.

பஸ் பழுதடைந்தால் அவற் றில் பயணம் செய்யும் பய ணிகள் தமது பயணத்தைத் தொடர தாமே ஏற்பாடு களைச் செய்யவேண்டியுள் ளது.

கடந்தவாரம் ஒரே நாளில் ஆவரங்காலுக்கும் யாழ்ப் பாணத்துக்கு மிடையில் பருத் தித்துறை டிப்போவுக்குச் சொந்தமான இருபஸ்கள்பழு தடைந்து வீதி ஓரத்தில் நின் றதைக் காணக் கூடியதாக இருந்தது. (இ-173)

# இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து லிபியா மாநாட்டில் ஆராய்வு

கொழும்பு, ஏப். 17

லிபியாவின் தலைநகர் திரி போலியில் நடைபெறுகின்ற உலக சமாதானத்துக்கும் ஒருமைப்பாட்டுக்குமான நான்காவது மாநாட்டில் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சி கள் பற்றி நீண்ட நேரம் ஆராயப்பட்டதாகத் தெரி விக்கப்படுகிறது.

மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருக்கும் 60 நாடுகளின் பிரதிநிதிகள் இனப்பிரச்சினையைத் தீர்ப் பதற்கான இலங்கை அரசாங் கத்தின் முயற்சிகளுக்கு பூரண ஆதரவைத் தெரிவித் துள்ளனர். இந்த மாநாடு ஐ. நா. வின் மேற்பார்வை யின் கீழ் நடைபெறுகிறது.

இலங்கை ஜனாதிபதியின் இனப்பிரச்சினையை தீர்ப்ப தற்கான அணுகுமுறைக்கு உதவியளிப்பதாக மாநாட் டில் கலந்து கொண்ட பல ரும் உறுதி அளித்தனர்.

விடுதலைப் புலிகள் இயக் கமும் இந்த சமாதானநடை முறைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மாநாட் டுப் பிரதிநிதிகள் வலியுறுத் தினார்கள் என்று மாநாட் டில் கலந்து கொண்டுள்ள அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தகவல் அனுப்பி உள்ளார்.

# 32 பெண்களுக்கு தையல் இயந்திரம்

யாழ்ப்பாண பிரதேச செய லக பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெற்றுவரும் 32 பெண்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் திட் டத்தின் கீழ் தையல் இயந் திரங்கள் பிரதேச செயலகத் தில் வைத்து நேற்று வழங் கப்பட்டன.

சமூகசேவைத் திணைக் களத்தினால் வழங்கப்பட்ட இந்தத் தையல் இயந்திரங் களைப் பெற்றுக் கொண்ட வர்களுக்கு தொடர்ந்து 3 மாதங்கள் தற்போது வழங் கப்பட்டுவரும் உதவிப் பணம் வழங்கப்படுமென்றும் —

அதன் பின்னர் இப்பணம் நிறுத்தப்படுமென்றும் — யாழ். பிரதேச செயலக நிர் வாக உத்தியோகத்தர் பேரா னந்தம் தெரிவித்தார்.

## கால்நடையாக...

(முதலாம் பக்கத் தொடர்)

இச்சம்பவத்தை அடுத்து இராணுவத்தினர் சுமார் அரை மணி நேரம் வேட்டுக்களைத் தீர்த்தனர். புத்தாண்டு பட் டாசு கொளுத்தப்படுவதாக மக்கள் முதலில் எண்ணினர். சிறிது நேரம் சென்ற பின்னரே மக்களுக்கு நிலைமை தெரிய வந்தது (இ-4)


## வாழ்த்துகின்றோம்

யாழ். பிரதேச செயலராகப் பதவி உயர்வு பெற்றுள்ள

உயர்திரு

துரையப்பா வைத்திலிங்கம்

அவர்களை வாழ்க, வளர்க, வளம் பல பெற்று, வையகத்துக்கு நற்பணி ஆற்றி இறையருள் கூடி நீடூழி நிலை பெறுகவென மனதார வாழ்த்தி வரவேற்கின்றோம்.

சனசமூக நிலையம்,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(46392)


## கொழும்பிலும்...

(முதலாம் பக்கத் தொடர்)

காப்பும் பலப்படுத்தப்பட்டுள் ளது.

கொழும்பில் சில வீதிகளில் மண்மூடைகள் அடுக்கப்பட்டு விசேட படையினர் நிறுத்தப் பட்டுள்ளனர்.

சில வீதிகள் போக்கு வரத் துக்கு மூடப்பட்டுள்ளன.

தாக்குதல் குறித்து தகவல் கிடைத்ததையடுத்து படையி னர் கொழும்பிலும் மற்றும் புறநகர்ப் பகுதிகளிலும் தேடு [illegible] கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-4-3)

## புதிய தலைவரைத்...

(முதலாம் பக்கத் தொடர்)

தலே ஒரே மார்க்கம் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் அத்வானி நேற்றுத் தெரிவித்தார்.

இதற்கிடையில் ஐக்கிய முன்னணியின் புதிய தலைவரா கத் தெரிவாகும் வாய்ப்பு உள்ளோரில் தமிழ் நாடு மாநில காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனாரின் பெயரே முன் னிலையில் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

புதுடில்லியில் இருந்து நேற்று முன்தினம் இரவு சென்னை திரும்பிய மூப்பனார், ''கருத்து ஒற்றுமையின் அடிப்படை யில் ஐக்கிய முன்னணி இன்று புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும்'' என்று தெரிவித்தார்.

புதிய தலைவராகத் தெரிவாகும் வாய்ப்புக் குறித்து செய்தியாளர்கள் கேட்ட போது மூப்பனார் பதில் அளிக்க மறுத்துவிட்டார்.

''எந்தக் கட்சியும் இவ்வளவு விரைவாக தேர்தலைச் சந்திக்கத் தயாராக இல்லை. மக்களும் தயாராக இல்லை'' என்று மூப்பனார் மற்றும் ஒரு கேள்விக்குப் பதில் அளிக் கையில் தெரிவித்தார். (இ-4-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக் கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17 - 04 - 1997இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org